தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 9

2008 ஏப்ரல் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு."

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

•24177—திரு. கோ. எதிரொலி மணியன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 2-6-1964 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது சிறிய இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சொந்த இடம் வாங்க நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் சொந்தக் கட்டடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கும், அப்பகுதிக்கு வருகிற ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் தாங்கள் உற்பத்திச் செய்கின்ற விவசாயப் பொருட்களை மழைக் காலங்களில் மழையில் நனையாத அளவில் பாதுகாப்பாக வைப்பதற்கும், அதேபோல சில பொருட்களை ஈரப் பதத்தோடு கொண்டுவரும்போது, அதைக் காய வைப்பதற்கு உலர்களத்துடன்கூடிய விற்பனைக் கூடம் அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கின்றேன். சொந்த இடம் வாங்க நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. நிலம் வாங்கியவுடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டடம் கட்டி விரைவிலே முடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1964 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 400 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்திற்கு மாத வாடகை ரூ.150 செலுத்தப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டு 425 மெட்ரிக் டன்னும், 2006-2007 ஆம் ஆண்டு 432 மெட்ரிக் டன்னும் விளைபொருட்கள் வரப்பெற்று, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 2005-2006 ஆம் ஆண்டு 25 ஆயிரம் ரூபாய் வருமானமும் 2006-2007 ஆம் ஆண்டு 20 ஆயிரம் ரூபாய் வருமானமும்

2008 ஏப்ரல் 21]

கிடைத்துள்ளது. உணவுப் பொருள் வரத்தும் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், அங்கு வாடகைக் கட்டடத்தில் இயங்குவதைவிட, நிலம் வாங்கி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம் கட்டி விவசாயிகளுக்கு இன்னும் சிறந்த முறையிலே சேவை செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *122*, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் *123*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

123—

கட்டடம்

***30892—திரு. எஸ் ஜெயபால்:**
திரு. அ. ராஜன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இராஜாக்காமங்கலத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இராஜாக்காமங்கலம் என்ற இடத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாவட்டத்தினுடைய தலைநகர். இராஜாக்காமங்கலத்திலே புதிய கட்டடம் கட்டினால், அங்கே